1994 ஏப்ரல் 5]

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழங்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். அடுத்த கேள்வி எதற்கு? அடுத்த கேள்வி கேட்டு கெடுத்துவிடக் கூடாது. வினா எண் 183, திரு. வே. தம்புசாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

183–

கங்களாஞ்சேரி வழியாக பழயவலத்திற்கு நகரப் பேருந்து விடுதல்

**20008--திரு. வே. தம்புசாமி:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாக பழயவலத்திற்கு நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாக பழயவலத்திற்கு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழயவலம் என்பது உட்கிராமம். அந்த கிராமம் திருவாரூர் நகருக்கு அருகாமையில் இருக்கிறது. அங்கேயிருந்து திருவாரூர் நகரத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், 3 கிலோமீட்டர் தூரத்திற்குள் நகரை வந்து அடைந்துவிட முடியும். ஆனால் வட்டாற்றிலே போக்குவரத்திற்கு எந்த விதமான பால வசதியும் இல்லாத காரணத்தால், அந்த மக்கள் பழயவலத்திலிருந்து செறுகுடி, கருப்பூர், கங்களாஞ்சேரி வழியாக ஏறத்தாழ 13 கிலோமீட்டர் சுற்றி வந்து நகரத்தை அடைய வேண்டி இருக்கிறது. இதனால் பள்ளிக்கூடத்திற்கு வரவோ, மருத்துவ மனைக்கு வரவோ அல்லது இதர பொதுக் காரியங்களுக்கு வரவோ முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே திருவாரூரிலிருந்து நாகூருக்குச் செல்லக்கூடிய நகரப் பேருந்தை அந்தக் கிராமத்திற்கு காலையிலே ஒரு தடவையாவது, மாலையிலே ஒரு தடவையாவது இயக்கினால் அந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு நகரத்திற்கு வர உதவியாக இருக்கும். அந்த வகையிலே அமைச்சரவர்கள் அந்தப் பேருந்தை விட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற மாதிரி 3 கிலோமீட்டர் தொலைவு இருந்தாலும்கூட, அது கற்சாலையாக இருக்கிறது. அங்கே குறுகிய பாலமாக இருக்கின்ற காரணத்தாலே அங்கே பேருந்துகளை இயக்க முடியவில்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொரு கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள். நாகூர் செல்லும் நகரப் பேருந்துகளை அந்த வழியாக இயக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு பரிசீலிக்கும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி ஆனால் அதைப் பரிசீலிப்பதைவிட, எப்படியேனும் பேருந்தினை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும் அங்கே ஒரு சின்ன கல்வர்ட் மட்டும்தான் போட வேண்டியிருக்கும். அதை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகச் செய்யலாம் அல்லது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் முயற்சி செய்து அந்தக் கல்வர்ட்டைக் கட்ட ஏற்பாடு செய்தால், அந்த மக்களுடைய பிரச்சினை தீருவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த வகையிலே பேருந்தை விடுவதற்கு அமைச்சரவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும் என்று சொன்னால் மட்டும் போதாது என்று சொன்னார்கள். பறக்கும் பஸ் என்னிடத்தில் இல்லை. இருந்தால், பரிசீலிக்க முடியாது, உடனடியாக விடுகிறேன் என்று கூடச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கேள்வியைப் போட்டு, கல்வர்ட்டை விரிவுபடுத்தினால், உடனடியாக, அடுத்த நாளே வேண்டுமானாலும் பேருந்தை இயக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 184, டாக்டர் க. கோபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

184-

நன்னிலத்திலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

**21593-டாக்டர் க. கோபால்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--